# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
**முறையீட்டு மனு எண்: 92/2017/பே–2**
**ஆணை எண். 33/2018/நாள் 27–02–2018**

**திரு இரா. கருப்பையா,**
**1/3/53-A J.R.R. நகர்,**
**தென்கரை,**
**பெரியகுளம்,**
**தேனிமாவட்டம் – 625 601** — **முறையீட்டு மனுதார்**

**செயல் அலுவலர்,**
**தென்கரை பேரூராட்சி,**
**தேனி மாவட்டம்.** — **எதிர் மனுதார்.**

**ஆணை**

திரு இரா. கருப்பையா, முறையீட்டு மனுதாரரின் 21.03.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.03.2017 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண் 092/2017 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள்மேற்கொள்ளப்பட்டும்,பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திரு இரா. கருப்பையா தனது முயைீட்டு மனுவில், தான் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை பேரூராட்சியில் வசிப்பதாகவும், தனது வீட்டிற்கு முன்பும் அருகிலும் உள்ள எழு வீடுகளிலிருந்து வரும் செப்டிக் டேங்க் நீரும், கழிவு நீரும் தேங்கியுள்ளதாகவும் இதனை சரிசெய்யக் கோரியும் தனது மனுவினை விசாரணை கோரி இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 27.04.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி, தென்கரை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

தேனிமாவட்டம், தென்கரை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 11.05.2017ம் நாளிட்ட அறிக்கையில் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

தேனி மாவட்டம், தென்கரை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 ஜே.ஆர்.ஆர் நகரில் கதவு எண் 1-3-53 A ல் வசிக்கும் திரு இரா. கருப்பையா என்பவர் தனது வீட்டு அருகில் கழிவு நீர் தேங்கி சுகாதாரக் கேடு ஏற்படுவதாகவும், அதை அப்புறப்படுத்த வேண்டுமென தனது 16.08.2016ம் நாளிட்ட மனுவில் கோரியிருந்ததாகவும், பேரூராட்சி பணியாளர்களை கொண்டு வடிகாலில் தேங்கியுள்ள கழிவு நீர்ர தற்காலிகமாக வெளியேற்றப்பட்டதாக பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி முறையீட்டு மனுதாரர் 24.11.2016ம் நாளிட்ட மனுவில் தனது வீட்டின் முன்பு கழிவு நீர் மற்றும் செப்டிக் டேங்க் நீர்த்தேக்கத்தால் வைரஸ் காய்ச்சல் வரும் நிலை உள்ளதாகவும் அதனை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி மாவட்டம் அவர்களுக்கு புகார் மனு அளித்ததாகவும் மேற்படி புகார் மனு (மனு எண் 1029/நாள் 24.11.2016) தென்கரை பேரூராட்சிக்கு வரப்பெற்றதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் மேற்படி இடத்தினை செயல் அலுவலர் தல ஆய்வு மேற்கொண்டதாகவும், மேற்கண்ட தெருவில் அந்த வீட்டின் அடித்தளம் சாலை மட்டத்தை விட பள்ளமாக உள்ளதாலும் மற்ற 6 வீடுகளின் அடித்தளம் உயர்வாக உள்ளதாலும், வடிகாலில் கழிவு நீர் சரியாக வழிந்தோட இயலவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் கழிவு நீர் வெளியேறுவதற்கு குழாய் பதித்து எதிரே உள்ள வடிகாலில் கழிவுநீர் வெளியேற வகை செய்யப்பட்டதாக தனது அறிக்கையில் தெரிவித்து அதற்கான புகைப்படங்கள் அடங்கிய அறிக்கையினை திரு இரா. கருப்பையா என்பவருக்கு பேரூராட்சி கடித எண் 11/2016/ நாள் 05.12.2016ன்படி பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.இது தொடர்பான அறிக்கையினை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி அவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டதாக தனது அறிக்கையில் தென்கரை பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.மேற்படி மனுதாரர் திரு இரா. கருப்பையா என்பவர் தனது வீட்டின் முன்புறம் அருகிலுள்ள 7 வீடுகளில் இருந்து வரும் கழிவு நீர் மற்றும் செப்டிக் டேங்க் நீரும் தேங்கியுள்ளது எனவும், அதை அப்புறப்படுத்தவேண்டும் எனவும் சுகாதாரப் பணிகளின் துணை இயக்குநர், தேனி அவர்களுக்கு மனு அளித்துள்ளது தொடர்பாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவரங்களும் புகைப்படங்களுடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரரது வீட்டு முன்பு தேங்கியுள்ள கழிவு நீரானது பேரூராட்சி பணியாளர்கள் மூலம் அவ்வப்போது அகற்றப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர் வீட்டு முன்பு பேரூராட்சியால் இரண்டு முறை கழிவு நீர் வடிகால் கட்டப்பட்டதாகவும், மனுதாரின் வீட்டின் மட்டம் சாலை மட்டத்தைவிட பள்ளமாக உள்ளதாலும் பிற வீடுகளின் மட்டம் சாலை மட்டத்தை விட உயர்வாக உள்ளதாலும் மனுதாரர் வீடு முன்பு கழிவு நீர் தேங்குகிறது எனவும் அதனை பேரூராட்சி நிர்வாகம் அவ்வப்போது

அகற்றி வருவதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சியின் செயல் அலுவலர், தென்கரை தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 22.08.2017ம் நாளிட்ட அறிப்பாணையில் முறையீட்டு மனுதாரர், தனக்கு தென்கரை பேரூராட்சி மூலம் அனுப்பிவைக்கப்பட்ட 05.12.2016ம் நாளிட்ட அறிக்கை ஏற்புடையதல்ல என தெரிவித்து 21.03.2017 அன்று தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து 21.03.2017 நாளிட்ட மனு குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களடங்கிய அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி பேரூராட்சி செயல் அலுவலர், தென்கரை அவர்களுக்கு ஆணையிடப்பட்டது.

தென்கரை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 13.09.2017ம் நாளிட்ட அறிக்கையில், மனுதாரரின் வீட்டு முன்பு இரண்டு முறை பேரூராட்சி திட்ட நிதியில் இருந்து வடிகால் கட்டப்பட்டது எனவும் மனுதாரின் வீட்டின் மட்டம் சாலை மட்டத்தை விட பள்ளமாக இருப்பதாலும், மற்ற வீடுகளின் மட்டம் சாலை மட்டத்தை விட உயர்வாக உள்ளதாலும் மனுதாரின் வீட்டு முன்பு கழிவு நீர் தேங்கியுள்ளது எனவும், தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர் பொதுமக்கள் வியூகத்தினை கருத்தில் கொண்டு தனது வீட்டின் மட்டத்தை உயர்த்திக் கொடுத்தால் மட்டுமே இப்பேரூராட்சி மூலம் தனியாருக்கு கழிவு நீர் செல்வது மற்றும் சுகாதார வசதிகளை செய்து கொடுக்க பேரூராட்சி தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஏற்கனவே கட்டப்பட்ட வடிகாலானது இவர் ஒருவரின் வீட்டிற்காக கட்டிய வடிகால் இடித்து அப்புறப்படுத்தப்பட்டது எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி பேரூராட்சி வளர்ச்சியடைந்து வருவதாலும் இனி வரும் காலங்களில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படும் பட்சத்தில் மனுதாரரின் வீட்டு கழிவு நீர் அதில் இணைக்கப்படலாம் எனவும் தற்போது மற்ற 6 வீடுகளின் தரைதள மட்டம் வடிகாலை விட உயர்வாக உள்ளதால் அவர்களின் வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் சரியாக வெளியேறுவதாகவும், மனுதாரரின் வீட்டின் தரைதளம் மற்றவர்களின் வீட்டின் தரைதளத்தைவிட சற்று உயர்த்தும் பட்சத்தில் தென்கரை பேரூராட்சியிலிருந்து வடிகாலின் மட்டத்தையும் சற்று உயர்த்தி சரியான வாட்டம் அமைத்து மற்ற 6 வீட்டை போல் மனுதாரின் வீட்டின் கழிவு நீரையும் வெளியேற்றிவிடலாம் என தனது அறிக்கையில் தென்கரை பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 08.11.2017ம நாளிட்ட அறிவிப்பாணையின் மூலம் தென்கரை பேரூராட்சி செயல் அலுவலரின் 13.09.2017ம் நாளிட்ட கடித நகலை முறையீட்டுமனுதாரருக்கு அனுப்பிவைத்து அதன் மீதான ஆட்சேபணை/விளக்கத்தினை இரண்டு வார காலத்திற்குள் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது ஆட்சேபணை/விளக்கக் கடிதத்தினை தனது 22.11.2017ம் நாளிட்ட கடிதத்தின் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 01.12.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி பொருள் தொடர்பான தங்களது விளங்கங்களை பதிவு செய்ய பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 20.02.2018 அன்று நேரில்

ஆஜராக கோரி ஆணையிடப்பட்டது. மேலும் பேரூராட்சி செயல் அலுவலரை முறையீட்டு மனுதாரரின்22.11.2017ம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள ஆட்சேபணை/விளக்க கடிதத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை சமர்ப்பிக்கக் கோரியும் ஆணையிடப்பட்டது.

மேற்படி அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவததில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் மற்றும் தென்கரை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் இணந்து தங்களின் வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

".....மனுவில் குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் குறித்து மனுதாரரும், செயல் அலுவலரும் கலந்து பேசியதாகவும் தங்களது வாக்கமூலத்தில் தெரிவித்துள்ளனர். பேரூராட்சிகள் விதிமுறைகள், நடைமுறைகளை அனுசரித்து மனுவில் உள்ள கோரிக்கையினை நிறைவேற்ற சில யோசனைகள் குறித்து இணைந்து பேசி முடிவு எடுத்ததாகவும் அதன் அடிப்படையில் தங்களுக்குள் கருத்து ஒற்றுமை ஏற்பட்டது எனவும் தங்களுடைய வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரரும், தென்கரை பேரூராட்சி செயல் அலுவலரும் கூட்டாக பதிவு செய்துள்ளனர்.

மேற்கண்ட வாக்குமூலத்தில் தென்கரைபேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் திரு இரா. கருப்பையா ஆகியோர் இப்பிரச்சினை தொடர்பாக தாங்கள் இருவரும் சுமுகமாக தீர்த்துக் கொள்வதாக சம்மதம் தெரிவித்த பட்சத்தில் இவ்வழக்கினை முடித்து வைத்து ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 27-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-

செயலாளர்.

1/3/18

பெறுநர்

1.திரு இரா. கருப்பைய்யா,
1/3/53-A J.R.R. நகர்,
தென்கரை,
பெரியகுளம்,
தேனிமாவட்டம் – 625 601

2.செயல் அலுவலர்,
தென்கரை பேரூராட்சி,
தேனி மாவட்டம்.,

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தேனி மாவட்டம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தேனி.